## நாகப்பட்டினம் நகராட்சி

**2017–ம் ஆண்டு மார்ச் மாதம் 15–ம் நாள் புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 15–03–2017 | பொருள் எண்.1<br>நாகப்பட்டினம் நகராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306 ன் கீழ் துணைவிதிகள் ஏற்படுத்தியும், 2016 –ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி திடக்கழிவு மேலாண்மையை நகராட்சியில் நடைமுறைப்படுத்த பயனர் கட்டணங்களை ( User Fees) நிர்ணயம் செய்யும் நகர்மன்ற தீர்மான எண் 17 நாள் 30.01.2017 ல் நகர்மன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது. மேற்கண்ட நிலையில் 2016 –ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகள் , விதி எண் 15 ல் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றியும், திடக்கழிவு மேலாண்மை நாகப்பட்டினம் நகராட்சி பகுதியில் முறைப்படுத்தவும் பயனர் கட்டணங்களை நிர்ணயம் செய்தும் கீழ்க்கண்டவாறு துணை விதிகள் ஏற்படுத்தி நகர்மன்ற ஒப்புதல் பெற்று பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை வரவேற்கும் வகையில் அலுவலக விளம்பர பலகையில் அறிவித்தும், நாளிதழில் வெளியிட்டும், விளம்பரப்படுத்தியும், ஆலோசனைகளை பரிசீலித்து நாகப்பட்டினம் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை நடைமுறைப்படுத்தலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br>நடைமுறைப்படுத்தலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br>1. நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்கள், சந்துகள், கடைவீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், உணவகஙகள், அலுவலஙகள், வணிகவளாகஙகள் இன்ன பிற இடஙகளிலிருந்து உருவாகும் திடக்கழிவுகளை தெருக்களிலோ, சாலை ஓரஙகளிலோ, சந்துகளிலோ, மழைநீ.ர் கழிவு நீர்கால்வாய்களிலோ, பொது இடஙகளிலோ நீர்நிலைகளிலோ போட தடைவிதிக்கப்படுகிறது.<br>2. மக்கள் வசிக்கும் மற்றும் கூடும் இடஙகளில் உருவாகும் குப்பைகளை 3 வகைகளாக ( I ) மக்கும் தன்மை ( II ) மக்காத தன்மை ( III ) அபாயகரமான தன்மை கொண்ட பொருட்கள் என அட்டவணை 3 –ன் படி தனித்தனியாக சேகரம் செய்யப்பட வேண்டும். மக்கும் தன்மையுள்ள குப்பைகளை பச்சை நிறக் கூடையிலும், மக்காத தன்மையுள்ள குப்பைகளை வெள்ளை நிறமுள்ள கூடையிலும் அபாயகரமான பொருட்களை கருப்பு நிற கூடையிலும் சேகரம் செய்யப்பட வேண்டும். இது வீடு அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். கூடைகள் சொந்த செலவில் வாஙகி உபயோகிக்கப்பட வேண்டும்.<br>3. இவ்வாறு தரம் பிரித்து வீட்டில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை நகராட்சி வாகனம் ஒவ்வொரு வீட்டிற்கும் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும். தனித்தனியாக பிரிக்கப்பட்ட இந்த குப்பைகளை வாகனத்தின் பொறுப்பாளரிடம் நேரில் ஒப்படைப்பது வீட்டின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். பிரிக்கப்படாத குப்பைகள் கண்டிப்பாக வாஙகப்படமாட்டாது.<br>4. அடுக்குமாடி குடியிருப்புகள், தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் இதர ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள பகுதியில் உள்ள வீடுகளது அல்லது நிறுவனஙகளது உரிமையாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் நகராட்சியின் வாகனம் வரும்போது அவை நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். நகராட்சி பணியாளர்களால் மாடி ஏறி வந்து குப்பை பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.<br>5. மக்கக்கூடிய குப்பையை முடிந்தவரையில் குப்பை உற்பத்தியாகும் இடத்திலேயே உரமாக்க அல்லது உயிரி மீத்தேன் முறையில் இயற்கை எரிவாயு தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கும் குப்பையிலிருந்து குப்பை உரம் தயாரிக்கும் போது அல்லது மீத்தேன் வாயு உற்பத்தி செய்யும் போது மிஞ்சும் உயிரி குப்பையை குப்பை சேகரிப்பவரிடம் அல்லது உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காட்டப்பட்டுள்ளவரிடம் ஒப்படைக்க வேண்டும். புது நகரியஙகள் மற்றும் குடியிருப்பு குழு சஙகஙகள் ஆகியவை குடியிருப்புப்பகுதிலேயே மக்கக்கூடிய குப்பையை கையாளும் வசதிகள் ஏற்படுத்த வேண்டும். | தீர்மானம் எண். 40<br>அனுமதிக்கப்பட்டது |

6. மீன், கோழி, ஆடு போன்ற இறைச்சி கடை நடத்துபவர்கள் கழிவுகளை தெருக்களிலோ அல்லது திறந்த வெளியிடங்களிலோ அல்லது கழிவு நீர்க் கால்வாய்களிலோ போடக்கூடாது. அவைகளை கசிவு ஏற்படாத வகையில் பொட்டலங்களாக்கி நகராட்சியின் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக் கூடாது.
7. மருத்துவமனை கழிவுகள், நோய் கிருமி சோதனை செய்யும் கூடங்கள் மற்றும் கால்நடை மருந்து கழிவுகளை எக்காரணம் கொண்டும், குப்பைகளில் சேர்க்க கூடாது. இந்திய அரசின் 2016 மருத்துவ கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) 2016 – ன் விதிகளில் கூறியவாறு மருத்துவமனை மற்றும் சோதனைச் சாலை பொறுப்பில் உரியவாறு அகற்றி அழித்தல் வேண்டும். மருத்துவமனை கழிவுகளை நகராட்சி பகுதியில் கொட்டுதல், புதைத்தல் மற்றும் எரித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.
8. தோட்டக் கழிவுகளை, உருவாக்கும் உரிமையாளர் அவற்றை தம் சொந்த பொறுப்பில் வைத்துக்கொண்டு பிரதிவாரம் வெள்ளிக்கிழமை நகராட்சி வாகனத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும். நகராட்சி சாலை ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும். சாலையோரங்களில் உள்ள மரக்கழிவுகளை பிற துறையினரால் அப்புறப்படுத்த வேண்டும். அப்புறப்படுத்தும்போது முழுமையாக அப்புறப்படுத்த வேண்டும்.தவறும்பட்சத்தில் அதற்கான கட்டணத்தை அத்துறையினரே நகராட்சிக்கு செலுத்த வேண்டும்.
9. கட்டிட இடிபாடுகளை கட்டிட உரிமையாளர் / ஒப்பந்தக்காரர்கள் சாலைகளிலோ, தெருக்களிலோ போடக் கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அவைகளை சம்மந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய நிர்வாகக் கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவைகளை அப்புறப்படுத்தும். உபயோகிப்பாளர் கட்டணம் அட்டவணை 1 வரிசை எண் 5ல் குறிப்பிட்டுள்ளபடி சம்மந்தப்பட்ட நகரமைப்பு ஆய்வாளரால் வசூலிக்கப்படும்.
10. நகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக், ரப்பர், டயர் உள்ளிட்ட திடக்கழிவுகள் எவற்றையும் எரிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. திருமண மண்டபங்கள், கோவில், தேவாலயங்கள், மசூதிகள், சத்திரம் ஆகியவற்றில் நடைபெறும் திருமணம் மற்றும் இதர விசேஷங்களின் போது உருவாகும் கழிவுகளை தெருக்களிலோ, சாலைகளிலோ, கழிவு நீர் வாய்கால்களிலோ அல்லது வேறு எந்த பகுதிகளிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இவற்றை தமது வாகனம் மூலம் நகராட்சி உரக்கிடங்கில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே அவற்றை பெற்றுச் செல்லும்.
12. உணவு விடுதிகள், தேநீர் விடுதிகள், தள்ளுவண்டியிலுள்ள உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள், இரவு நேரக் கடைகள், காய்கறி மொத்த வியாபார நிலையம், மார்க்கெட் ஆகியவற்றில் உருவாகும் குப்பைகளை தெருக்களிலோ, சாலைகளிலோ அல்லது நகராட்சியின் எந்த ஒரு பகுதியிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். உரிய நிர்வாகச் கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே இவற்றினை பெற்றுக்கொள்ளும்.
13. அச்சகங்கள், தொழிற்சாலைகள், ரசாயன மருந்து கையாளும் தொழிற்சாலை மற்றும் இதில் குறிப்பிடாத அனைத்து வணிக மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் குப்பை கழிவுகளை நகராட்சி எல்லைக்குள் கொட்டக்கூடாது.
14. தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளை நகராட்சி பகுதியில் விடக்கூடாது. கழிவுகளை அப்புறப்படுத்த மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வகுத்துள்ள விதிமுறைகளின் படி அப்புறப்படுத்த வேண்டும்.
15. பாதசாரிகள் மற்றும் சாலை ஓரங்களிலும் இதர இடங்களிலும் குடியிருப்போர் நகராட்சி சாலை ஓரங்களில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தல் கூடாது.
16. செப்டிக் டேங்க் கழிவுகளை, கழிவு நீர் வாய்க்கால்களிலோ, அல்லது தெருக்களிலோ கொட்டக் கூடாது. அவ்வாறு கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.
17. பொது இடங்களில் 100 நபர்களுக்கு மேல் கூடும் நிகழ்ச்சியை நடத்துபவர்கள் மூன்று நாட்களுக்கு முன்னரே நகராட்சிக்கு தெரியப்படுத்த வேண்டும். நகராட்சி தெரிவிக்கும் முறையில் நிகழ்ச்சியில் உண்டாகும் கழிவுகளை ஒப்படைக்க வேண்டும்.
18. 5000 சதுர மீட்டர் மற்றும் அதற்கு மேல் பரப்பளவுள்ள குடியிருப்பு வளாகங்கள் மற்றும் நிறுவனங்களில் சேகரமாகும் மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் மட்டுமே நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும். மக்கக்கூடிய கழிவுகளை தங்களது நிறுவனமே உரிய முறையில் உரமாக்கிக்கொள்ள வேண்டும்.

19. மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 –ன் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1986 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டத்திற்கு எதிராக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.

20. மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள, நிர்வாக கட்டணஙகளை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணஙகளை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, நகராட்சியின் ஆணையாளருக்கு நகராட்சி மன்றத்தினரால் அதிகாரம் வழஙகப்பட்டுள்ளது.

21. திடக்கழிவு மேலாண்மை திட்டம் விதி 2016 விதி எண் 17 (2) ன் படி கிளாஸ், டின், பிளாஸ்டிக் கவர் இதர பொருள் தயாரிப்பாளர்கள், உற்பத்தியாளர்கள் அல்லது உரிமையாளர் அறிமுகப்படுத்தும் பொருட்களிலிருந்து உருவாகும் கழிவுகள் நகராட்சி மூலம் மறுசுழற்சி அல்லது மறுசுழற்சியற்ற பொருள்களாக கொடுக்கும்போது தயாரிப்பாளர், உற்பத்தியாளர் அல்லது உரிமையாளர் நகராட்சி தெரிவிக்கும் நாட்களுக்குள் அவர் உற்பத்தி செய்த கழிவு பொருட்களை அவரே திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும்.

**அட்டவணை– 1**

**நிர்ணயம் செய்யப்பட்ட பயனர் கட்டணம்**

| வ.எண் | விவரம் | காலம் | நிர்ணயம் செய்யப்பட்ட பயனர்கட்டணம்(ரூபாய்) |
|---|---|---|---|
| **1. தனிநபர் குடியிருப்பு** | | | |
| i. | சொத்துவரி ரூ.500க்குள் | ஒரு வருடம் | 120.00 |
| ii. | சொத்துவரி ரூ.501–1000 க்குள் | ஒரு வருடம் | 240.00 |
| iii. | சொத்துவரி ரூ.1001–2000 க்குள் | ஒரு வருடம் | 360.00 |
| iv. | சொத்துவரி ரூ.2001 மேல் | ஒரு வருடம் | 600.00 |
| **2. நிறுவனம்** | | | |
| i. | வெளிப்புற நோயாளிகள் மருத்துவமனை | ஒரு வருடம் | 500.00 |
| ii. | மருத்துவமனை கழிவுகள், மருத்துவ கழிவுகள் நீஙகலாக படுக்கை வசதியுள்ள மருத்துவமனைக்கு மட்டும்<br>அ) 5 படுக்கைகளுக்கு குறைவாக உள்ள மருத்துவமனைக்கு<br>ஆ) 5 படுக்கைகளுக்கு மேலாக உள்ள மருத்துவமனைக்கு | ஒரு வருடம் | <br>750.00<br>1500.00 |
| **3. வணிகம்** | | | |
| i. | தேநீர் நிலையம் / சிற்றுண்டி | ஒரு வருடம் | 500.00 |
| ii. | பழச்சாறு கடைகள் மற்றும் பழமுதிர் நிலையஙகள் | ஒரு வருடம் | 2000.00 |
| iii. | உணவு விடுதிகள் சாப்பாடு வசதியுடன் கூடிய<br>1. உணவு விடுதி | ஒரு வருடம் | 3000.00<br>1500.00 |

| | | | |
|---|---|---|---|
| | 2. மெஸ் மற்றும் டிபன் ஸ்டால்<br>3. நடமாடும் உணவகம் | | 500.00 |
| iv. | கோழி மற்றும் மீன் கடைகளுக்கு | ஒரு வருடம் | 450.00 |
| v. | வணிக வளாகம் | ஒரு வருடம் | 3000.00 |
| vi. | இருசக்கரவாகன பழுது நீக்கும் கடை | ஒரு வருடம் | 300.00 |
| vii. | தேஙகாய் / பூ / காய்கறிகள் / வியாபாரம் | ஒரு வருடம் | 300.00 |
| viii. | பலசரக்கு/ஸ்டேசனரி/மருந்தகம்/ ஜெராக்ஸ் கடைகள் | ஒரு வருடம் | 1200.00 |
| ix. | சாலையோர தற்காலிக கடைகள் மற்றும் இரவு நேர கடைகள் | ஒரு வருடம் | 450.00 |
| x. | சினிமா தியேட்டர் / திரையரஙகம் | ஒரு வருடம் | 3000.00 |
| xi. | திருமண மண்டபம்<br>மண்டபம் – சிறியது<br>மண்டபம் – பெரியது | நிகழ்வு ஒன்றுக்கு | 750.00<br>1000.00 |
| xii. | ஜவுளி கடைவியாபாரம் பெரியது<br>சிறியது | ஒரு வருடம் | 3000.00<br>1500.00 |
| xiii. | மரக்கழிவுகள் | ஒரு வருடம் | 500.00 |
| xiv. | தோட்டக்கழிவுகள் | நிகழ்வு ஒன்றுக்கு | 100.00 |
| xv. | பழைய பேப்பர் கடை கழிவுகள் அப்புறப்படுத்த | ஒரு வருடம் | 750.00 |
| xvi. | செருப்பு உற்பத்தி செய்பவர்கள் ஏற்படுத்தும் கழிவுகளை அப்புறப்படுத்த | ஒரு வருடம் | 300.00 |
| 4.**மற்றவை** | | | |
| i. | வீட்டு தோட்டக் கழிவுகள் | நிகழ்வு ஒன்றுக்கு | 100.00 |
| **5.கட்டிட இடிபாடுகள்** | | | |
| i. | கட்டிட இடிமான பொருட்கள் அகற்றுதல் | லோடு ஒன்றுக்கு | 1000.00 |

## அட்டவணை– 2

### அபராதக்கட்டணஙகளின் அட்டவணை

| **எண்** | **துணைவிதிகளின்படி குறிப்பிட்டுள்ள பொருள்** | **ஆபராத தொகை ஒவ்** **நிகழ்விற்கும் ரூ** |
|---|---|---|
| 1. | குப்பைகளை பொது இடஙகளிலோ, தனியார் இடஙகளிலோ கொட்டுதல், வாகனஙகளை சுத்தம் செய்து பொது இடஙகளில் கழிவுகளை கொட்டுதல் | 500.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடைகள் மற்றும் வணிக வளாகங்களை சுத்தம் செய்து பொது வெளியில் எறிதல் | | |
| | 2. | இச்சட்டத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளில் குப்பைகளை தரம் பிரிக்காமல் வெளியேற்றுதல்<br>அ) ஒவ்வொரு தனி வீட்டிற்கும்<br>ஆ) தொகுப்பு வீடுகள்/ அடுக்குமாடி குடியிருப்புகள்<br>இ) மொத்த உற்பத்தியாளர்கள் | 500.00<br>5000.00<br>10000.00 | |
| | 3. | இச்சட்டத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளில் பிரிக்கப்படாத கட்டிட கழிவுகளை பொது இடங்களில் கொட்டுதல் | 25000.00 | |
| | 4. | தோட்டக் கழிவுகள் மற்றும் மரக்கழிவுகளை இச்சட்டத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளில் அல்லாமல் வெளியே கொட்டுதல் | 500.00 | |
| | 5. | குப்பை கழிவுகளை அதற்கென உள்ள இடங்களில் அல்லது அதற்கான சமுதாய குப்பை தொட்டிகளில் அல்லாமல் மற்ற இடங்களில் கொட்டி வைத்தல் | 1000.00 | |
| | 6. | குப்பைகளை எரித்தல்<br>அ) தனிநபர் இல்லங்களில் அல்லது தனி நபருக்கு சொந்தமான இடங்களில்<br>ஆ) பொது இடங்களில்<br>இ) பொது வளாகங்களில் அல்லது பொது நிறுவனங்களில் | 200.00<br>500.00<br>1000.00 | |
| 7. | வியாபார நோக்கில் வெட்டப்படும் ஆடு, மாடு, கோழி, மீன், பன்றி போன்ற மாமிச கழிவுகளை பொது வெளியில் கொட்டுதல் | | 5000.00 | |
| 8. | நடமாடும் வியாபாரி அல்லது தெருவோர வியாபாரி விற்பனை கழிவுகளை சேகரிக்க தனி கூடை உடன் கொண்டு வராவிட்டால் | | 500.00 | |
| 9. | நடமாடும் வியாபாரி அல்லது தெருவோர வியாபாரி இத்துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கழிவுகளை தரம் பிரிக்காமல் கொட்டினால் | | 1000.00 | |
| 10. | பொது நிகழ்வுகள் ஒவ்வொன்றின்போதும் அவ்விடங்களை 24 மணிநேரத்திற்குள் சுத்தம் செய்யாதபோது | | ஒவ்வொரு நிகழ்வின்போதும் ரூ.1,000 அபராதமாக விதிக்கப்படும். | |

**அட்டவணை –3**

**கழிவுகளின் வகைகளை விளக்கும் பட்டியல்**

**( I ) மக்கும் கழிவுகள் ( பச்சை நிறக்கூடை )**

மக்கும் குப்பை எனப்படுவது நகராட்சி திடக்கழிவுகளில் பொதுவாக காணப்படுவது ஆகும். இவைகளை ஈரக் குப்பைகள் என்றும் அழைக்கலாம். மக்கும் குப்பைகள் எனப்படுபவை மனிதர்கள் பயன்படுத்தும் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் கழிவு மூலப்பொருட்கள் ஆகும். இவைகள் மற்ற உயிருள்ள நுண்ணுயிர்களால் மக்கச் செய்யும் தன்மையுடையவை ஆகும்.

1. சமையலறை கழிவுகள் டீ தூள், இலைகள், முட்டை ஓடுகள், பழஙகள், காய்கறி கழிவுகள், போன்றவை
2. அசைவ கழிவுகள் அல்லது மாமிச கழிவுகள்
3. தோட்டக் கழிவுகள்
4. வீட்டு விலங்குகளின் கழிவுகள்
5. காகித கழிவுகள்
6. தேஙகாய் கழிவுகள்
7. சாம்பல்

**( II ) மக்காத கழிவுகள் ( வெள்ளை நிறக்கூடை )**

மக்காத கழிவுகள் என்பதும் நகராட்சி திடக்கழிவுகளில் பொதுவாக காணப்படுபவைகளேயாகும். இவைகளை ஈரமில்லா குப்பைகள் என்றும் அழைக்கலாம். இவைகளை ஏதாவது ஒரு முறையின் மூலம் வேறு பொருளாக மாற்றுவதற்கான மூலப் பொருளாக மாற்றலாம். அவை ஏற்கனவே இருந்த பொருளாகவோ அல்லது அவற்றை ஒத்த வேறு பொருளாகவோ மாற்ற இயலும்.

1. செய்திதாள்கள்
2. புத்தகஙகள், மற்ற தாள்கள்
3. கண்ணாடிகள்
4. உலோக பொருட்கள் அல்லது மின் கம்பிகள்(வயர்)
5. பிளாஸ்டிக் பொருட்கள்
6. பயன்படாத துணிகள்
7. பழைய செருப்பு, பெல்ட் போன்ற லெதர் பொருட்கள்
8. ரெக்ஷின்
9. ரப்பர்
10. மரக்கட்டைகள்,உடைந்த மரச்சாமான்கள்
11. தெர்மாகூல் அட்டை போன்றவைகள்

**( III ) அபாயகரமான கழிவுகள் பட்டியல் ( கருப்பு நிறக் கூடை )**

1. காற்றுடன் கூடிய திரவம் அடைக்கப்படும் கலன்கள் ( ஸ்ப்ரே)
2. பேட்டரிகள்
3. சமையலறை மற்றும் கழிப்பறை சுத்தம் செய்ய பயன்படுத்தப்படும் அமிலம் கலந்த பொருட்கள் மற்றும் அதன் கலன்கள்.
4. வாகனஙகளில் பயன்படுத்தப்படும் பேட்டரிகள், ஆயில் பில்டர் போன்ற வாகன பயன்பாட்டு கழிவுகள்.
5. அமிலஙகள் அவற்றை வாஙகி பயன்படுத்தும் கலன்கள்
6. ஒப்பனைப் பொருட்கள், வேதிப்பொருட்கள் கலந்த பூச்சி மருந்துகள் அவற்றின் கலன்கள்.
7. ஒளி விளஙகுகள், குழல் விளஙகுகள், மின் காந்த குழல் விளக்குகள்
8. பயன்பாடற்ற மருந்து, மாத்திரைகள் அவற்றின் கலன்கள்
9. பயன்படாத வர்ணஙகள் (பெயிண்ட்) எண்ணெய், பசைத் திரவஙகள் மற்றும் அதன் கலன்கள்
10. பூச்சி மருந்து, களைக்கொல்லி மற்றும் அதன் கலன்கள்
11. ஒலி, ஒளி நாடாக்கள் மற்றும் அதன் கலன்கள்
12. சாமான்கள் பேக்கிங செய்ய பயன்படும் பஞ்சு பொருட்கள்
13. தெர்மாமீட்டர் மற்றும் மெர்க்குரி கலன்கள்
14. கணினி, பிரிண்டர், டெலிவிஷன், டிஜிட்டல் கேமிரா, னுஏனு, போன்ற எலக்ட்ரானிக் கழிவுகள்

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | அனுமதிக்கலாம் |
| | 2 | மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழஙகலாம். |

ந.க.எண்.321/2017/எச்1

| | | |
|---|---|---|
| 30–01–2017 | பொருள் எண்.2<br>நாகப்பட்டினம் நகராட்சியின் 2017–2018–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்து அச்சடித்து பைண்டிங செய்து வழஙகுவற்கு உத்தேச செலவினம் ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. | தீர்மானம் எண்.41<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | அனுமதி வழஙகலாம். |
| | 2 | மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து வழஙகுவதற்கு மன்றம் அனுமதி வழஙகலாம் |

ந.க.எண். 1109/2017/சி1

<table>
<tr><td>30–01–2017</td><td>பொருள் எண்.3<br>2017–2018–ம் ஆண்டிற்கு நகராட்சி பணிக்கு தேவையான படிவங்கள் எழுதுபொருட்கள் வெள்ளத்தாள்கள் கணினிவரி வசூல்மைய இரசீதுகள் மற்றும் கணினிக்கு தேவையான உபகாரணங்கள் ஆகியவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திலிருந்து பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 அனுமதி வழஙகலாம்.<br>2 மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து வழஙகுவதற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்<br>ந.க எண்.1108/2017/சி1</td><td>தீர்மானம் எண்.42<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30–01–2017</td><td>பொருள் எண்.4<br>நாகப்பட்டினம் நகராட்சி பொது சுகதார பிரிவில் இயஙகும் குப்பைகள் ஏற்று வாகனம் டிப்பர் லாரி TN.51–எச்–7369 வாகனத்தில் பேட்டரி செயல் இழந்து விட்டதாகவும் அதற்கான புதிய 10 –AM-H-12 VOLT BATTERY வாஙகி வழஙகிட கோரி சமபந்தப்பட்ட ஒட்டுநர் விண்ணப்பம் அளித்துள்ளார். எனவே மேற்படி வாகனத்திற்கு 10 AM H-12 VOLT பேட்டரி வாஙகிட உத்தேச செலவினம் ரூ.11,000 ஆயிரத்திற்கு பொது நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 அனுமதி வழஙகலாம்.<br>ந.க.எண்.1132/2017/எச்2</td><td>தீர்மானம் எண்.43<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30–01–2017</td><td>பொருள் எண்.5<br>நாகப்படடினம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு இயஙகும் டமப்ர் பிளேசர் வாகனம் TN.51 D- 9055 புதிய H 10 -12 VOLT BATTERYவாஙகிடஇவ்வலுவலக நகர்மன்ற தீர்மான எண்,3 நாள்.30–01–2017–ல் அனுமதி வழஙகப்பட்டதற்கினஙகமேற்படிவாகனத்திற்கு புதிய பேட்டரி வாஙகிட விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட வாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது,<br><table><tr><td>வ.எண்</td><td>விலைப்புள்ளியின் விபரம்</td><td>தொகை ரு</td></tr><tr><td>1</td><td>ஆண்டவர் டிராக்டர் 12 ஹாஸ்பிட்டல் ரோடு நாகப்பட்டினம்</td><td>6,600</td></tr><tr><td>1</td><td>குட்வில் ஆட்டோ மொபைல் அண்ணாசலை அருகில் 36 வடக்கு கோட்டைவாசல் நாகபட்டினம்</td><td>6500</td></tr><tr><td>2</td><td>மகா ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் மற்றும் பேட்டரி ஒர்க்ஸ் வடக்கு கோட்டைவாசல் கிழக்கு அண்ணாசலை அருகில் நாகப்பட்டினம்</td><td>6,300</td></tr></table>மேற்படி வரைப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துளள வரிசை எண் 3 மகா எலக்ட்ரிக்கல்ஸ் மற்றும் ஆட்டோ ஒர்க்ஸ் நாகப்பட்டினம் அவர்கள் அளித்துளள விலைப்புள்ளி குறைவாக இருப்பதாள் அதனை ஏற்று சப்ளை உத்தரவு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.121/2017/எச்2</td><td>தீர்மானம் எண்.44<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30–01–2017</td><td>பொருள் எண்.6<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட புதிய நம்பியார் நகர், சம்பாதோட்டம் மகாலெட்சுமிநகர், அம்பேத்கார்நகர், அமிர்தாநகர், ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள சுனாமி நிரந்தர குடியிருப்புகளில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் கிணறுகளில் ஸ்கிரின் வெல் கலெக்ஷ்ன் வெல்களில் மண் அடைப்புகள் ஏற்பட்டு கழிவு நீர் வெளியேற்றுவதில் சிரமம் உள்ளது எனவே மேற்படி கிணறுகளை துர்வாரிசுத்தம் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.80 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழஙகலாம்<br>2 மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழஙகலாம்<br>3 பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலா் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதி வழஙகலாம்<br>ந.க.எண். 5058/2016/இ1</td><td>தீர்மானம் எண்.45<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 30–01–2017 | பொருள் எண்.7<br>நாகப்பட்டினம் நகராட்சி பகுதிகளில் தற்சமயம் கோடை காலம் நிலவிவருவதால் குடிநீர் பற்றாக்குறையை போக்கும் வகையில் ஏற்கனவே நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கைபம்புகளில் பழுதான கைபம்புகளை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது, | | | தீர்மானம் எண்.46<br>அனுமதிக்கப்பட்டது |
| | அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழஙகலாம் | |
| | | 2 | மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழஙகலாம் | |
| | | 3 | பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதி வழஙகலாம் | |
| | ந.க.எண். 152/2017/இ1 | | | |
| 30–01–2017 | பொருள் எண்.8<br>நாகப்பட்டினம் நகராட்சியின் துாய்மை இந்தியா திட்டம் 2016–17 ன் கீழ் நகராட்சி குப்பை கிடஙகில் அமைக்கும் பணி ரூ.67.50/–இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள இடத்தில் அமைந்தளள 4 மின் கம்பஙகளை வேறு இடத்திற்கு மாற்றம் செய்திட தமிழ்நாடு மின் பகிர்மான கிழகம் நாகப்பட்டினம் அவர்களை கோரியதில் மேற்படி மின் கம்பஙகளை மாற்றம் செய்திட ஆகும். மதிப்பீட்டு கட்டணம் ரூ.1,17,250/–இலட்சம் மட்டும் செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது மின் கம்பஙகளை மாற்றம் செய்திட ஆகும் மதிப்பீட்டுக்கட்டணம் ரூ.1,17,250/–மட்டும் தமிழ் நாடு மின் பகிர்மான கழகம் நாகப்பட்டினம் அவர்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு, | | | தீர்மானம் எண்.47<br>அனுமதிக்கப்பட்டது |
| | அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழஙகலாம். | |
| | | 2 | திட்டப்பணியின் அவசர அவசியத்தினை மேற்படி தொகையினை தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு செலுத்தியதற்கு மன்றம் அஙகீகரிக்கலாம் | |
| | | 3 | இச்செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளலாம் | |
| | ந.க.எண். 2767/2015/இ1 | | | |

//உண்மை நகல்//

(ஒம்) பா.ஜான்சான்
ஆணையர்மற்றும் தனி அலுவலர்